DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.290/15

Deposition of Witness: PW 8

| | |
|---|---|
| Name ராதா | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.10.2019

அரசு தரப்பில் முதல் விசாரணை:

நான் தற்போது திண்டுக்கல் பொருளாதார பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26..3.15ம் தேதி காலை 10.30மணிக்கு நான் தேனி காவல்நிலை எல்லைக்குட்பட்ட பகுதியில் ரோநது அலுவலில் இருக்கும் போது கிடைத்த தகவலை பெற்று க.விலக்கு அரசு மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த முத்துசெல்வி என்பவரை பார்த்த போது அவா சுயநினைவு இல்லாமல் இருந்ததால் அவர் மகன் ராஜபாண்டி என்பவர் கொடுத்த புகாரை பெற்று 12.15மணிக்கு தேனி காவல் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 335-15 இதசபிரிவு 279, 337ன் கீழ் வழக்கு பதிவு செயதேன். முதல் தகவல் அறிக்கை அசாஆ.4. பின்பு எப்ஐஆர் நகலையும் வாதியின் புகாரையும் இணைத்து நீதிமன்ற நடுவர் மற்றும் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன். பின்பு 13.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சாட்சிகள் சடைஈஸ்வரன், பாண்டி ஆகியோர்கள் முன்னிலையில் பார்வைமகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்து கையெப்பம் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். வரைபடம் அசாஆ.5. பின்பு சாட்சி பட்டியலில் உள்ள சாட்சிகள் 1 முதல் 5 வரையிலான சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினம் 20.30மணிக்கு தேனி காவல்நிலையத்தில் ஆஜரான இவ்வழக்கின் எதிரி ராஜேஷ்கண்ணன் த.பெ.வெள்ளைச்சாமி கிழக்கு தெரு அல்லிநகரம் என்பவரை 20.30மணிக்கு கைது செய்து தக்க ஜாமீனில் விடுவித்தேன். 28.3.15ம் தேதி வழக்கில் காயம்பட்ட முத்துசெல்வி என்பவர் 27.3.15ம் தேதி மேல்சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தவர் 28.3.15ம் தேதி இறந்துவிட்டதாக மதுரை ராஜாஜி அர சுமருத்துவமனையில் இருந்து வான்வெளி செய்தி மூலம் கிடைத்ததகவலின் பேரில் வழ்ககின் சட்டபிரிவை இதசபிரிவு 279, 337ல் இருந்து 304(ஏ) இதசவாக சட்டமாறுதல் செய்து சட்டமாறுதல் அறிக்கை தாக்கல் செய்தேன். சட்டமாறுதல் அறிக்கை அசாஆ.6. மேல் விசாரணைக்காக வழக்குகோப்பை காவல்ஆய்வாளர் அவர்கள் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை:

எதிரி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜரில் இருந்தார். அவர்கள் இன்றைய தினம் குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை என்று வழக்கை வேறு தேதிக்கு ஒத்தி வைக்குமாறு கேட்டுகொண்டார். ஆனால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்க நியாயமான காரணம் முன் வைக்கபடாததால் வேண்டுகோள் நிராகரிக்கப்படுகிறது. சாட்சி குறுக்கு விசாரணை செய்யபடவில்லை.